# JSR IAS ACADEMY

# தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்

## திணை (நிலம்) சார்ந்த சங்க காலச் சமூகம்

## திணை (நிலம்) சார்ந்த சங்க காலச் சமூகம்

- நிலம் ஐந்து திணைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- மண்ணின் வளத்தைப் பொறுத்து நிலங்கள் வகைப்படுத்தப்பட்டன .
- மருதநிலம் ‘மென்புலம்’ (நன்செய்) என அழைக்கப்பட்டது. அதில் நெல்லும் கரும்பும் விளைந்தன.
- நெய்தல் தவிர மற்றவை ‘வன்புலம்’ (புன்செய்) என அழைக்கப்பட்டன. அவற்றில் தானியங்களும் பருப்பு வகைகளும் விளைந்தன.

அகத்திணை

- தமிழர்கள், தம்வாழ்க்கையை ‘அகம்’ எனவும் ‘புறம்’ எனவும் இரு கூறாகப் பிரித்தனர்.
- இதனை, அன்பின் வழிப்பட்டது ‘அகவாழ்வு’ எனவும், வீரத்தின் வெளிப்பாடு ‘புறவாழ்வு’ எனவும் கூறுவர்.
- அகத்திணை ஐந்து வகைப்படும். அவைமுறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும்.

- சங்க இலக்கியங்கள் அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ‘அன்பின் ஐந்திணையாகப்’ பகுத்துள்ளன.



ஐவகை நிலங்கள்

| திணை | நிலம் | தொழில் | மக்கள் | கடவுள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | வேட்டையாடுதல் / சேகரித்தல் | குறவர், குறத்தியர் | முருகன் |
| முல்லை | காடும், காடு சார்ந்த இடமும் | ஆநிரை மேய்த்தல் | ஆயர், ஆய்ச்சியர் | மாயோன் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வேளாண்மை | உழவன், உழத்தியர் | இந்திரன் |
| நெய்தல் | கடலும் கடல் சார்நத பகுதியும் | மீன்பிடித்தல் / உப்பு உற்பத்தி | பரதவர், நுளத்தியர் | வருணன் |
| பாலை | வறண்ட நிலம் | வீரச் செயல்கள் | மறவர், மறத்தியர் | கொற்றவை |

ஐந்திணைக்கான முதற்பொருளும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பொழுது | | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| | | சிறுபொழுது | பெரும்பொழுது | |
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | யாமம் | கூதிர், முன்பனி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மாலை | கார் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | எற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | நண்பகல் | இளவேனில், முதுவேனில், பின்பனி | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

1. காலை – காலை 6 மணி முதல் 10 மணி வரை
2. நண்பகல் – காலை 10 மணி முதல் 2 மணி வரை
4. மாலை – மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
5. யாமம் – இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை
6. வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக் காலம் – மார்கழி, தை
4. பின்பனிக் காலம் – மாசி, பங்குனி
5. இளவேனிற் காலம் – சித்திரை, வைகாசி
6. முதுவேனிற் காலம் – ஆனி, ஆடி

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல் ஆயர். ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

JSR
முயற்சி - பயிற்சி - தேர்ச்சி

புறத்திணை

- தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப்பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது.
- வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன.
- மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது ‘பாடாண்திணை’ ஆகும்.

- மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் 'பொதுவியல் திணையில்' அடக்கிக் கூறுவர்.

1. வெட்சி
2. கரந்தை
3. வஞ்சி
4. காஞ்சி
5. உழிஞை
6. நொச்சி
7. தும்பை
8. வாகை
9. பாடாண்திணை
10. பொதுவியல்
11. கைக்கிளை
12. பெருந்திணை

சங்க கால நிலங்களுடன் தொடர்புடைய தெய்வங்களை சரியாக பொருத்துக

(a) மருதம் — 1. வருணன்

(b) நெய்தல் — 2. இந்திரன்

(c) பாலை — 3. மாயோன்

(d) முல்லை — 4. கொற்றவை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |